**<u>Case No. DVC. No.02/2024, Dated: 10.07.2026</u>**

**<u>PW–1– வாசுகி</u>**

**(சத்தியபிரமாணம் திரு. E. கோவிந்தராஜ், Grade III Bench Clerk of this court அவர்களால் செய்யப்பட்டது).**

**<u>(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 03.19.P.M.):–</u>**

**<u>எதிர்மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

1. நான் பொறியியலில் EEE முடித்துள்ளேன். நான் மாதம் எவ்வளவு சம்பளம் பெற்று வருகின்றேன் என்றால் ரூ.50,000/– பெற்று வருகின்றேன். என்ன பரிகாரத்திற்காக இம்மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது குழந்தையை கேட்டும், ஜீவனாம்சம் கேட்டும் தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரருக்கு திருமணத்திற்கு பின்னிட்டு எத்தனை மாதங்கள் மது அருந்தும் பழக்கம் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக எதிர்மனுதாரர் என்னிடம் தகராறு செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரமாண பத்திரத்தில் 2–ம் பக்கத்தில் வரதட்சனை கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. திருமணத்திற்கு பின்னிட்டு எத்தனை மாதம் கழித்து மாதவிலக்கு ஏற்படாது என்றும், குழந்தை பேறுக்கு வாய்ப்பில்லை என்றும் சொல்லியுள்ள நிலையில் எத்தனை மாதம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. திருமணத்திற்கு பின்னிட்டு எனது பெற்றோரிடம் நான் செல்போனில் பேசும்போது எதிர்மனுதாரர் என்னை அடித்ததாக பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் எப்போது எத்தனை மாதங்கள் மேற்படி சம்பவம் போன்று நடந்தது என்று முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் எப்போது அடித்தார் என்றோ எப்போது மருத்துவ சிகிச்சை பெற்றேன் என்றோ தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று மருத்துவம் பார்த்துவிட்டு எப்போது எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்தேன் என்று தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எப்போது சேலம் அரசு

மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றேன் என்று தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவ சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மது அருந்தி விட்டு என்னை கொடுமை செய்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் எப்போது நடந்தது என்று தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வளைகாப்பு நிகழ்ச்சிக்கு வரும்போது எதிர்மனுதாரர் எவ்வித தகராறும் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. முதல் குழந்தை கர்பம் தரிக்கும்போது எதிர்மனுதாரர் மருத்துவமனை அழைத்து எனக்கு மருத்துவம் பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருடன் ஏற்காடு அரசு மருத்துவமனையில் முதல் குழந்தை கர்பம் தரித்தபோது வந்து மருத்துவம் பார்த்து சென்றேன் என்றால் சரிதான், எதிர்மனுதாரரை கட்டாயப்படுத்தி உடன் அழைத்துவந்தேன். எதிர்மனுதாரரே விருப்பப்பட்டுதான் என்னை மருத்துவ சிகிச்சைக்கு அழைத்து வந்தர் என்றும், வழக்கிற்காக பொய்யாக எதிர்மனுதாரரை நான் கட்டாயப்படுத்தி அழைத்து வந்தேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. அரூர் அரசு மருத்துவமனையில் 18.02.2018-ம் தேதியன்று எனக்கு குழந்தை பிறந்தபோது எதிர்மனுதாரர் என்னுடன் இருந்தார் என்றால் சரிதான். குழந்தை பிறந்து 5வது நாள் குழந்தைக்கு மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்பட்டதால் தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு எதிர்மனுதாரர் சிகிச்சைக்கு அழைத்து சென்றார் என்றால் சரிதான். குழந்தை பெயர் சூட்டும் விழாவிற்கு எதிர்மனுதாரர் வந்தார் என்றால் சரிதான். குழந்தை பிறந்து 5 மாதம் கழித்து தான் எதிர்மனுதாரர் அவரது வீட்டிற்கு என்னையும், குழந்தையையும் அழைத்து சென்றார் என்றால் சரிதான். எனக்கு வேலை கிடைக்கும் வரை நான் எதிர்மனுதாரர் மற்றும் குழந்தை மற்றும் எதிர்மனுதாரரின் பெற்றோர்களுடன் அனைவரும் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான்.

4. நான் தர்மபுரியில் இருந்தபோது எனது குழந்தை எதிரிமனுதாரரின் பெற்றோர் வீட்டில் இருந்தார் என்றும், நானும் எனது கணவரும் வாரம் ஒரு

முறை ஏற்காடு வந்து குழந்தையை பார்த்துவிட்டு செல்வோம் என்று சொன்னால் சரியல்ல, எனது குழந்தை எனது அம்மாவீட்டில் இருந்தது. மேற்படி சங்கதி வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. 2–வது குழந்தை கர்பம் தரித்தபோது எனது கணவர் ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு மருத்துவம் பார்க்க அழைத்து வருவார் என்றால் இல்லை. 2–வது குழந்தை கர்பம் தரித்தபோது எங்கு மருத்துவம் பார்த்தேன் என்றால் ஏற்காட்டிலுள்ள பிலியூர் அரசு மருத்துவமனையில் நானே சென்று மருத்துவம் பார்த்துக்கொண்டேன். மருத்துவம் பார்த்வீட்டு எத்தனை நாள் கழித்து எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேன் என்றால் 3 நாட்கள் கழித்து எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேன். நான் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றபோது தான் கரு கலைந்தது என்றால் சரியல்ல, ஏற்காட்டில் இருந்தபோது தான் கரு கலைந்தது. எப்போது கரு கலைந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 2–வது முறை கர்பம் தரித்தபோது எதிர்மனுதாரர் தான் என்னை அழைத்து சென்று மருத்துவம் பார்த்தார் என்றும், எனது பெற்றோர் வீட்டிற்கு சென்ற பின்னர் எனது பெற்றோரின் அறிவுறுத்தல் படி மற்றொரு குழந்தை வேண்டாம் என்று சொன்னதால் எனது பெற்றோர் வீட்டில் எனது கரு கலைந்தது என்றால் சரியல்ல.

5. எனது அப்பா எப்போது வந்து என்னை எனது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து சென்றார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பெற்றோருக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் உள்ளது என்றால் 2 ஏக்கர் உள்ளது. எப்போது எதிர்மனுதாரர் ஒரு ஏக்கர் நிலத்தினை எழுதி வாங்கி வரச்சொன்னார் என்று முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எப்போது எதிர்மனுதாரர் ரூ.1,00,000/– பணத்தினை வாங்கி வரச்சொன்னார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1–ம் எதிரிமனுதாரரும், அவரது பெற்றோர்களும் சொத்தும், பணமும் வாங்கி கொண்டு வந்தால் தான் என்னுடன் சேர்ந்து வாழ முடியும் என்றும், இல்லையென்றால் என்னை அடித்து துரத்திவிடுவதாக எப்போது சொன்னார்கள் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால்

இல்லை. எதிர்மனுதாரரும், எதிர்மனுதாரரின் பெற்றோர்களும் எவ்வித பணமும், நிலமும் என்னிடம் கேட்கவில்லை என்றும், எதிர்மனுதாரரின் குடும்பம் நல்ல குடும்பம் என்ற காரணத்தினாலேயே எனது தந்தை என்னை மீண்டும் எதிரிமனுதாரர் வீட்டிற்கு முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல என்னை அழைத்து வந்தார் என்றால் சரியல்ல.

6. 1–ம் எதிர்மனுதாரரின் சகோதரிக்கு எப்போது திருமணம் நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். எதிரிமனுதாரரின் சகோதிரியின் திருமணத்திற்காக எதிர்மனுதாரர் என்னிடமிருந்து ரூ.50,000/– தொகையை எப்போது கேட்டார் என்றோ, அந்த தொகையை எப்போது நான் எதிர்மனுதாரரிடம் கொடுத்தேன் என்றோ தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு 5–6 வருடத்திற்கும் முன்னரே எதிர்மனுதாரரின் சகோதரிக்கு திருமணம் நடந்துவிட்டது என்றும், வழக்கிற்காக பொய்யாக எதிர்மனுதாரரின் சகோதரியின் திருமணத்திற்காக பணம் கேட்டார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எப்போது தங்க கை சையின் தொலைத்தார் என்றோ அது பற்றி புகாரோ கொடுக்கப்பட்டதா என்றால் தொலைத்த தேதி பற்றி குறிப்பிடவில்லை புகார் கொடுக்கப்படவில்லை. மேற்படி சங்கதி ஜோடிக்கப்பட்ட சங்கதி என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எந்த வருடத்தில் நான் பணிபுரியும் இடத்திற்கு வந்து தகராறு செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ATM கார்டு கொடுக்கவில்லை என்றால் என்னை வேலையை விட்டு தூக்கிடுவேன் என்று மிரட்டியபோது எந்த அதிகாரி வந்து சமாதான படுத்தினார் என்றோ மேற்படி சம்பவம் எப்போது நடந்தது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7. ரூ.10,00,000/– கேட்டு எதிரிமனுதாரர் எப்போது எனது கழுத்தை நெரித்து கொல்ல முயற்சி செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை எதிர்மனுதாரர் கொல்ல முயற்சி செய்தது சம்மந்தமாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது சம்பள பணத்திலிருந்து ரூ.1,20,000/–ஐ எதிர்மனுதாரர் எப்போது எடுத்தார் என்று

குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சம்பவமே நடக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக மேற்படி சம்பவம் நடந்ததாக புனையப்பட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் திருமணத்திற்கு முன்போ செயற்கை பல் வைத்திருந்தேன் என்றால் சரிதான், ஒரு பல் வைத்திருந்தேன். செயற்கை பல் தானாக விழுந்ததை வைத்து எதிர்மனுதாரர் மீது இருந்த முன் விரோதத்தினை பயன்படுத்தி அவருக்கு எதிராக ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் எதிர்மனுதாரர் அடித்ததால் எனது முன் பகுதி பற்கள் கொட்டிவிட்டதாக சொல்லியுள்ள நிலையில் முன் பகுதியில் மேல் வரிசை பற்களா அல்லது கீழ் வரிசை பற்களா என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

8. நான் எந்த வருடம் எதிர்மனுதாரரை விட்டு சென்றேன் என்று எனது மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது குழந்தை தக்சதாவை எப்போது எதிர்மனுதாரர் அபகரித்து சென்றார் என்று தேதி குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. குழந்தையை எதிர்மனுதாரர் தற்போது வரை தனியார் பள்ளியில் நல்ல முறையில் படிக்க வைத்து வருகின்றார் என்றால் சரிதான். குழந்தை என்ன படித்து வருகிறார் என்றால் 4–ம் வகுப்பு படித்து வருகின்றார். எதிர்மனுதாரர் இம்மனு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டும் என்னை வேலூரில் பயிற்சிக்காக அழைத்து சென்றார் என்றால் சரியல்ல, நான் வேலூரில் பயிற்சிக்காக இருந்தபோது என்னை வந்து பார்த்து சென்றார். மனுதாக்கல் செய்ததன் பின்னிட்டும் எதிர்மனுதாரர் என்னுடன் தொலைபேசியில் நல்ல முறையில் பேசி வருகின்றார் என்றால் சரிதான். சேலம் நீதிமன்றத்தில் உள்ள சமரச மையத்தில் வைத்து எனது குழந்தையை பார்த்தேன் என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரருடன் தற்போதும் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரும் என்னுடன் தற்போதும் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றும், நான் வழக்கிற்காக வேண்டி எதிர்மனுதாரருடன் சேர்ந்த வாழ தயாராக உள்ளேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது

குழந்தைக்கு இது நாள் வரை அடிப்படையான தேவைகளையும் நான் செய்து தரவில்லை என்றும், அவர் பெயரில் எவ்வித சேமிப்பும் தொடங்கவில்லை என்றும், அவரை பராமரிக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான், குழந்தையை பாக்கவிடாததால் நான் செய்யவில்லை. நான் எனது சகோதரி மற்றும் தயாரின் பேச்சை கேட்டு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் 5 வருடமாக தனியாக வாழ்ந்து வருகின்றேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாாரருடன் சேர்ந்து வாழ்ந்தால் மாத சம்பளத்தினை தயாருக்கும், சகோதரிக்கும் கொடுக்க முடியாது என்ற காரணத்தினால் எனது தயாரும், சகோதரியும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விடாமல் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. நான் எனது குழந்தையை கொடுக்கவேண்டும் என்று பெயரலவிற்காக மட்டுமே குழந்தையை பெற மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குழந்தைகக்காக வேண்டி உண்மையாக மனு தாக்கல் செய்திருந்தால் எதிர்மனுதாரரின் சேமிப்பு கணக்கில் குழந்தைக்காக பணம் வைப்பீடு செய்தும், அடிப்படை வசதிகள் செய்து தந்திருப்பேன் என்றால் சரியல்ல.

9. நான் எதிர்மனுதாரரை விட்டு தனியாக பரிந்த வாழ்ந்து வருவதால் எதிர்மனுதாரர் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் கணவர் என்ற முறையில் அனைத்து பணிவிடைகளையும் செய்து வந்தார் என்றும், நான் தான் அதனை தவிர்த்து வருகின்றேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எவ்வித கொடுமையும் செய்யாததால் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. திருமணத்தின் போது எனக்கு போட்ட நகைகள் அனைத்து என்வசம் உள்ளதால் எதிர்மனுதாரர் எவ்வித நகையையும் எனக்கு கொடுக்க கடமைபப்பட்டவர் அல்ல என்றால் சரிதான். எனது பெற்றோரிடமிருந்து ரூ.2,00,000/−ஐ எதிர்மனுதாரர் பெறவுமில்லை என்றும், எனது சம்பளம் தொகை ரூ.1,20,000/−ஐ எதிர்மனுதாரர் எடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எனது வருமானத்தினை கொண்ட எனது அடிப்படை தேவைகளை பார்த்துக்கொள்ள

எனக்கு வசதியுள்ளதால் எதிர்மனுதாரரிடமிருந்து எவ்வித ஜீவனாம்சமும் கோர அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எந்த விதத்திலும் குடும்ப வன்முறை செய்யாததால் இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நடக்காத சம்பவங்களை மிகைப்படுத்தி சாட்சியமாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 04.18.P.M):-**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R.Elanchezhian
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.